சைவசமய வார ஏடு.

Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

[௧] விரோதிஹ (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது — தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதிஹு மாசிமீ உகஉ வெள்ளிக்கிழமை (12 March. 1965) [இல-சகூ]

## சமய சமரசம்

—:0:—

(சோ. ந.)

சிலர் வைதிக மார்க்கமே சிறந்தது என்பர்; வேறு சிலர் சாங்கியம் மேலானது என்பர். வேறு சிலர் யோக மார்க்கத்துக்கு நிகரில்லை என்பர். சைவ மார்க்கத்திலுள்ளவர் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பர். வைஷ்ணவர் தமது மார்க்கமே மேலானதென்பர். இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தமக்கு விருப்பமானதும, தமது போக்குக்கு உகந்ததுமான வழிகளைப் பின்பற்றுவார்கள். அது அவர்களுடைய சுவையின் வேறுபாட்டையே காட்டுகிறது. ஆனல் இந்தப் பல்வேறு வழிகளும் கடைசியாக வந்து அடையும் இடம் நீயே. கடவுளே! ஆறுகளெல்லாம் கடைசியில் கடலையே சென்று அடைவதுபோல, எல்லா மார்க்கங்களும் கடைசியாக உன்னிடத்திலேதான் வந்து சேர்கின்றன. சில வழிகள் நேராக இருக்கலாம். சில வளைந்து குடிலமா யிருக்கலாம். ஆனல் கடைசி முடிவு நீதான் பிரபோ என்று ஒரு பக்தர் பாடுகிறார்.

"த்ரயீசாங்யம்யோக:
பசுபதிமதம் வைஷ்ணவமிதி
ப்ரபின்னேப்ரஸ்தானே
பரமிதமத: பத்யமிதிச
ருசீனம் வைசித்ரியாத்ருஜு
குடிலநானுபதஜுஷாம்
ந்ருணாமேகோ கம்யஸ்த்வமசி
பயசாமர்ணவஇவ".

"ஏகோகம்ய": போயடையும் நகரம் ஒன்றுதான். வழிகள் பலவுண்டு என்கிறார். வேதகாலந்தொட்டு இன்றுவரை இந்துக்கள் கொண்ட சமயச் சகிப்புத் தன்மையிது "ஏகம்சத் விப்ரா பகுதா வதந்தி" உள்ளது ஒன்றுதான். அதைப் பலர் பலவாறு கூறுவர் என்கிறது வேதமந்திரம்.

"பல்வேறு வழிகளில் நாம் கடவுளை உபாசித்துக் காட்சியும் அருளும் பெறலாம். ஆற்றங் கரையில் பலபடித்துறைகளுண்டல்லவா? ஆனந்த வெள்ளமாகிய பரம்பொருளுக்கும் பலபடித்துறைகளுண்டு. எந்தப்படித்துறையிலுமிறங்கித் தண்ணீர் மொண்டுகொள்ளலாம்; குளிக்கலாம். எந்தச் சமயத்தையும், எந்த முறையையும் தூய உள்ளத்துடனும் பக்தியுடனும் பின்பற்றினுல் போதும். ஆண்டவனை அடையலாம். ஒரு வீட்டின் மேல் மாடிக்குப் படிக்கட்டு வழியாகவும ஏறலாம். மூங்கில் வைத்துத் தெத்தியும் ஏறலாம்: கயிற்றைக் கட்டி அதன்மூலமும் ஏறலாம் இவ்வாறே பல சமயங்களும் பல வழிகளைக் காட்டுகின்றன.

பக்தியோடு வழிபடும் மக்கள் எம்மதத்தினராயினுஞ்சரி பிறமதத்தினரை மிக்க விநயத்துடன் கௌரவிக்க வேண்டும். எல்லாச் சமயங்களும் நம்மைப் பரம்பொருளிடத்திலே சேர்ப்பிக்கும்.

இது, நூறு வருடங்களுக்குமுன் தோன்றிய சுவாமி விவேகானந்தரால் உலகுக்கு இடித்துரைக்கப்பட்டதொரு பேருண்மை. இதையே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும் கூறினர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் அசோகமன்னர் கல்லிலே எழுதிவைத்த சாசனங்களிலும் இதையே காண்கிறோம்.

தேவானும்பிரிய பிரியதர்சனனனுகிய அரசன் சாசனம்; "மகாராஜாவுக்கு அதிக மகிழ்ச்சி தருவது எதுவென்றால் எல்லா மதத்தினரும் தத்தம் முறையில் தத்தம் ஆத்ம சக்தியை விருத்தி செய்து கொள்வதே. தன் சமயத்தை மேம்படுத்துவதற்காகப் பிறர் சமயத்தைத் தூற்றத் தோன்றும். அவ்வாறு செய்யக்கூடாது. சமயம் வாய்த்தபோதெல்லாம் பிறமதத்தினரைக் கௌரவித்துப் பாராட்டவேண்டும், இப்படிச் செய்வதால் ஒருவன் பிற மதத்தினருக்கு உதவிசெய்வதோடன்றித் தன் சமயத்தின் பெருமையையும் வளர்ப்பான். ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் கொள்கைகளைக் கற்றுணர்ந்து அவ்வழியில் பக்தியை விருத்தி செய்யவேண்

தொடர்ச்சி 4ம் பக்கம்

### சைவபரிபாலன சபையில் நடைபெறும் வகுப்புகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில் ஷெ சபை நாவலர் மண்டபத்தில் ஒவ்வொருநாளும் பிறபகல் 5 மணி தொடக்கம் 8-30 மணி வரையும் பண்டித வகுப்புக்களும், சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் வகுப்புகளும் ஏனைய வகுப்புகளும நடைபெற இருக்கின்றன. இவ் வகுப்புகள் 17-3-65 புதன் கிழமை ஆரம்பமாகும். விபரங்களுக்கு சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்தொடர்பு கொள்ளவும் மாணவர்கள் இவ் வகுப்புகளிற் சேர்ந்து பயனடைவார்களாக.

### நற்சிந்தனை

—o—

ஆராயும் வேதம்
அறியாத மெய்ப்பொருளே
பேராயிரம்படைத்த
பெம்மானே கண்வளராய்.

### செங்கலடியில் சிவதொண்டன் நிலையம்

—0—

மட்டக்களப்பு செங்கலடியில் ரூ. 75000 செலவில் கட்டிப் பூர்த்திசெய்யப் பட்டிருக்கும் சிவதொண்டன் ஆச்சிரமம் 14-3-65ல் அன்று திறந்து வைக்கப்படும். சுவாமி ஸ்ரீ சாந்தசுவாமி (இலங்கையின் முன்னுள் தேசாதிபதி சோல்பரி பிரபுவின் மகன்) இவ்வாச்சிரமத்தில் தங்கியிருப்பார். திறப்புவிழாச் சிறப்பாக நடைபெறும். யாழ்ப்பாணத்திலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் அனேக அன்பர்கள் மேற்படி திறப்புவிழாவில் பங்குபற்றச் செல்கின்ருர்கள்.

### திருவாசக மன்றத் திறப்பு விழா

அராலி மேற்கு ஞானியார் கோயில் முன்றிலில் காலஞ்சென்ற முன்ஞள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. மு. செல்வத்துரை அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட திருவாசக மன்றம் அவருடைய சிராத்த தினமாகிய 13-3-05 சனிக்கிழமை மாலை 6-30 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னுள் அதிபர் திரு. வி, மு. ஆசைப்பிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்படும். வட்டுக்கோட்டைக் கிராமச்சங்கத் தலைவர் திரு. செ' சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் திரு. மு. செல்வத்துரை அவர்கள் ஞாபகமாகப் பல பெரியார்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்படும் விரிவுரைகளின் பின்பு நடனம், பாட்டு, கலச நடனம் முதலிய இசை நிகழ்ச்சுகளும் நடைபெறும்.

### தேவாரப்பண் வகுப்பு

இறைவன் நாதவடிவானவன். பன்னிரு திருமுறைகள் தமிழ் வேதங்களாக விளங்குகின்றன. அவற்றைப் பண்ணுடன் ஓதினுல் இறைவனடி சேரலாம். அப்பர் சுவாமிகளும் பண்ணினிசையாகி நின்ருய் போற்றி எனக் குறிப்பிட்டமை இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. எமது நாட்டிலுள்ள சிறுவர்கள் பண்ணோடு இசைடயில்வதற்கு வசதியாக இவ் வகுப்பு இன்று ஆரம்பமாகிறது எனச் சைவபரிபாலன சபையின் சமயப்பிரசார அமைச்சர் திரு மு. மயில்வாகனம் அவர்கள் தேவாரப்பண் வகுப்பை 5-3-65 வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கும்பொழுது கூறினர். இவ்வகுப்புச் சைவபரிபாலன சபையின் ஆதரவில் நடைபெறுகிறது. இவ்வகுப்பை தேவார சங்கீத பூஷணம் ஸ்ரீ. நடராசா அவர்கள் நடத்துகிருர். இந்த வகுப்பில் 120 மாணவர்கள் கலந்துகொள்கிருர்கள்.

## வரியோ வரி?

—0—

பண்டைக்காலத்தில் தமிழரசர்கள் எமது நாட்டையாண்டபோது மக்கள் தங்கள் வருவாயில் ஆறில் ஓரு பங்கு வரியாகக் கொடுக்க வேண்டியிருந்தது. இராச காரியம் என ஓர் வழக்கம் இருந்தது இது இப்பொழுது காணப்படும் சிரமதான முறையின் முன்னோடியாகும். சிரமதானத்தை விரும்பியவர்கள் செய்யலாம். ஆனல் இராசகாரியம் மக்கள் ஒவ்வொருவராலும் செய்யப்படவேண்டிய தொன்றாகும். ஆங்கிலேயர் காலத்தில் இவ் விராசகாரிய முறை நீக்கப்பட்டுத் தலைவரி

— ஒரு வரியிறுப்பாளன் —

முறைகொண்டுவரப்பட்டது ஆண்கள் ஒவ்வொருவரும் (பிராமணர் தவிர) தலைக்கு ரூபா ஒன்று செலுத்த வேண்டும். நெல் விளைவுவரி, சிறுதானிய வரி என்ற வரிகளும் கொண்டு வரப்பட்டன. இம் மூன்று வரிகளும் 70 வருடங்களுக்குமுன் நீக்கப்பட்டன ஆங்கிலேயர் காலத்தில் கொண்டுவரப்பட்ட மற்றைய முக்கிய வரிகள் ஏற்றுமதி இறக்குமதி வரி, கள்ளுவரி, உப்புவரி என்பனவாகும். பகிரங்க சேவைப்பகுதி வேலைக்காக வாகன வரி, நீர்ப்பாசனவரி முதலியனவும் விதிக்கப்பட்டன, உறுதி முதலிய சாதனங்களுக்கும் தபாற் சேவைக்கும் முத்திரை வரி விதிக்கப்பட்டது.

ஏறக்குறைய 30 வருடங்களுக்கு மூன் வருமான வரி பூதல்வரி முதலியன கொண்டு வரப்பட்டன. இப் பூதல்வரி 20,000 ரூபாவுக்கு உட்பட்ட சொத்துடையவர்களுக்கு விதிக்கப்படவில்லை. 30,000 ரூபாவுக்கு மேல் பெறுமதியுள்ள சொத்துக்களுடையவர்களுக்கு ½ விகிதம ஆக இருந்தது. 1947 ம் ஆண்டு இது 3 விகிதம் ஆக உயர்த்தப்பட்டது. பின் 1958-ம் ஆண்டு இது 5 விகிதம் ஆக உயர்த்தப்பட்டது. தனிச்சிங்கள்ச் சட்டம் இயற்றப்பட்ட பின் 50,000 ரூபாவுக்கு மேற்பட்ட சொத்துடையவர்களுக்கு இவ் வரி 2 விகிதம் 3 விகிதம் ஆகப் படிப்படியாய் ஏற்றப்பட்டு அதிக பணக்காரர்களுக்கு இவ் வரி 20 விகிதம் ஆக உயர்த்தப்பட்டது. இதை 4, 5, 6 விகிதமாகப் படிப்படியாய் ஏற்றி, உச்ச வரியை 40 விகிதம் ஆக உயர்த்தினுர்கள். 1958-ம் ஆண்டு இவ்வுச்ச வரியை அதிக செல்வர்களுக்கு 50 விகிதமாக உயர்த்தினுர்கள், முன் 5, 10, 15, என்ற விகிதப்படி முறையாயிருந்த வருமான வரியை 1947ம் ஆண்டில் 6, 12, 18 என்ற விகித முறையில் உயர்த்தினுர்கள். அதன்மேல் இதனை 15, 20; 25 விகிதமாக உயர்த்தி, உச்சவரியை 80 வீதமாக்கினுர்கள்

தனிச்சிங்களச் சட்டம் ஏற்பட்ட பிறகு சிங்களம் தெரியாத காரணத்திற்காக திறமையுள்ள உத்தியோகஸ்தர்கள் நீக்கப்பட்டார்கள். அவர்களின் இடங்களுக்கு சிங்களமும் ஆங்கிலமும் அரைகுறையாகத் தெரிந்தவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதனுல் அரசாங்க ஊழியர்கள் தொகை அதிகரித்தது. அரசாங்க அறிக்கைகள் - கடிதங்கள் முதலியன ஆங்கிலத்தில் சிந்தித்து ஆங்கிலத்தில் எழுதிய பின், சிங்களத்தில் மொழி பெயர்க்கப்படவேண்டியிருந்தமையால் அரசாங்க ஊழியர் தொகை மேலும் அதிகரிக்கலாயிற்று.

பங்கீட்டரிசிமுறை யுத்த காலத்தில் கப்பற் போக்குவரத்துத் தடையினுல் கொண்டுவரப்பட்டது. யுத்தம் முடிந்து 20 வருடகாலமாகியும் இன்னும் அந்த முறை கையாளப்பட்டு வருகின்றது, ஒரு படி 75 சதவீதம் பணம் கொடுத்துப் பிற நாட்டிலிருந்து வருவித்த அரிசியை அரசாங்கம் ஒரு படி 25 சதமாக மக்களுக்கு விநியோகம் செய்கின்றது. மேலதிகமாக உள்ள 50 சதத்தை அரசாங்கம் அரசியல் வருமானத்திலிருந்து உதவ வேண்டியுள்ளது. இன்னும் மந்திரிமார்கள் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஆகியவர்களுடைய பிறதேச உல்லாசப் பிரயாணத்திற்குப் பெருந்தொகைப்பணம் தேவைப்படுகின்றது. இவற்றிற்கெல்லாம் பணம் போதாமலிருப்பதனுல் தனிச்சிங்களச்சட்டம் இயற்றப்பட்டபின்பு நமது அரசாங்கம் செல்வ வரி, நன்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### பேச்சுப் போட்டி.

ஆண்டுதோறும் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆதரவில் நடைபெறும் ஈழகேசரிப்பொன்னையா நினைவு தினப் பேச்சுப் போட்டி இவ்வாண்டு 3-4-65 ல் மேற்படி சபை மண்டபத்தில் நடைபெறுமெனவும், அதற்குரிய விண்ணப்பங்கள் 19- -65 க்கு முன் அனுப்பப்பட வேண்டுமெனவும் அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

எதிர்வரும் 16-3-65 செவ்வாய்க்கிழமை வண்ணை வைத்தீஸ்வரர் கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு இந்துசாதனம் அலுவலகத்திலும், சைவப் பிரகாச அச்சகத்திலும் கருமமாற்றுவோருக்கு விடுமுறை வழங்கப் பெறுமென்பதை அபிமானிகளுக்கு அறியத்தருகிறோம்.

— அதிபர்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

குரோதி ஸூ மாசி மீ
உகூவ வெள்ளிக்கிழமை

## நாட்டில்குற்றங்கள் கூடுங் காரணம்?

நீதியரசர் திரு. H. W. தம்பையா அவர்கள் அண்மையில் பலப்பிற்றியா என்னும் நகரிலுள்ள பௌத்த இளைஞர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் 'சமயத்தின் அவசியம்' என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றும்பொழுது குடியினால் விளையும் கேடுகளைக் குறிப்பிட்டபொழுது கூறியதாவது: "கௌதம புத்தர் கள்ளருந்துவதை விலக்க வேண்டுமெனக் கூறியுள்ளனர், கள்ளருந்துவதனால் ஒருவன் சித்த சுவாதீனத்தை இழந்து குற்றங்களைப் புரிகின்றான். யாழ்ப்பாணக் குடாநாட்டில் கள் அதிகமாக இறக்கும் நான்கு மாதங்களில் மக்கள் புரிகின்ற குற்றங்கள் மற்றைய எட்டு மாதங்களில் அவர்கள் புரிகின்ற குற்றங்களிலும் இருமடங்கதிகமாகும்". மேற்படி நீதியரசர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுகின்ற காலத்தில் குற்றவாளிகள் பிழை புரிவதற்கு முக்கிய காரணம் கள் என்பதைத் தமது அநுபவவாயிலாக உணர்ந்தே இவ்விதமான கருத்துக்களைத் தமது விரிவுரையில் தெரிவித்தனர். அவருடைய கூற்றைபிட்டு யாழ்ப்பாண மக்கள் வெட்கமடைய வேண்டும். அவர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் கள் அருந்துவதினால் அடையும் தீமைகளைப்பற்றி முன்னும் பல மேடைகளில் கூறியிருக்கின்றமையை யாம் அறிவோம். யாழ்ப்பாணத்தில் கள் அருந்தும் தீய பழக்கம் மரவரி கொண்டுவந்த பின்பே அதிகரித்துவிட்டது. சிலமாதங்களுக்கு முன்பு சிங்கள நாட்டில் மரவரி முறையைக்கொண்டு வருதற்கு அரசாங்கம் தீர்மானஞ் செய்தபொழுது அதனை பௌத்த குருமாரும் பொதுசனங்களும பலமாக எதிர்த்தனர். பொதுக் கூட்டங்கள் வாயிலாகவும் பத்திரிகைகள் வாயிலாகவும் அவர்கள் தங்கள் மறுப்பை வெளிப்படுத்தியமையால் அரசாங்கம் மரவரி முறையை அங்கு கொண்டு வரும் திட்டத்தைக் கைவிட்டது. சிங்கள மக்கள் வெற்றியடைந்தனர்.

நமது யாழ்ப்பாணக்குடாநாட்டில் மரவரி முறை முப்பது வருடங்களுக்கு முன் கொண்டுவரப்பட்டது. அதனால் நாட்டுக்கு விளையும் கேடுகளை நமது நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கின்றனர். மரவரி முறையை அகற்றுவதற்கு ஒருவித முயற்சியையும் அவர்கள் கையாளவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள சாராயத் தவறணைகளையும், கள்ளுத்தவறணைகளையும்மூடுவதற்கு முப்பது வருடங்களுக்கு முன் மதுநீக்கச் சபைகள் தொண்டாற்றி வாக்கெடுப்புமூலம் அவற்றை மூடினார்கள். இப்பொழுது மதுநீக்கச் சபைகள் ஒன்றுயிறும் நமதுநாட்டிலில்லை. பொதுமக்களுக்குக் கள் அருந்துவதன் தீமைகளை விளக்கி மரவரி முறையை நமது நாட்டிலிருந்து அகற்றுவதற்கு மதுநீக்கச் சபைகள் உடனே நிறுவப்பட வேண்டும்: கள் அருந்துதல் எல்லாச் சமயங்களாலும் விலக்கப்பட்ட பாவமாகும், யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள எல்லா மதத்தாபனங்களும் இக்கொடிய பாவத்தை நீக்குவதற்கு முயல வேண்டும். இப்பொழுது பாராளுமன்ற அங்கத்தவர்களாக முன்வருதற்கு வந்துள்ள அபேட்சகர்களிடம் மரவரி முறையை நீக்கித் தர வேண்டுமெனப் பொது மக்கள் வாக்குறுதி பெற வேண்டும். ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவதாரஞ் செய்த இந்தப் புண்ணிய பூமிக்கு அவமானத்தையுண்டாக்கிக் கொண்டிருக்கும் இவ்விழி தகைமையுள்ள மரவரி முறையை நம் நாட்டவர்கள் அகற்றுவிட்டால் அவர்கள் பாவம் புரிந்தவராவார்கள். தங்கள் சந்ததியாருக்கும் துரோகம் புரிந்தவராவார்கள். யாழ்ப்பாண மக்கள் விழித்தெழுந்து இந்த மரவரி முறையை நீக்குவதற்கு இனிமேலாவது செயலாறுவார்களாக.

"உண்ணற்க கள்ளை
யுணிலுண்க சான்றோரா
னெண்ணப்பட வேண்டா தார்"

அறிவுடையராயினும் அவ்வறிவையிழத்தற்கு ஏதுவாகவுள்ள கள்ளினையுண்ணுதிருக்கக்கடவர். அங்ஙனம் களளுண்பவர் நல்லோரால் மதிக்கப்பட மாட்டார்கள். நல்லோருடைய மதிப்பை வேண்டாதவரே கள்ளை உண்பர். கள் பஞ்சமாபாதகங்களுளொன்றாகும், அது மற்றைய நான்கு பாதகங்களையும் மக்கள் புரிதற்கும் ஏதுவாகவிருக்கும். நமது நாட்டில் தீமையொழிந்து அறம் பெருகக்கூடிய வகையில் நம் தலைவர்கள் மரவரியை நிற்பாட்டுதற்கு வேண்டியவற்றை உடனடியாகப் புரிவார்களென எதிர்பார்க்கின்றோம்.

---

சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பாடி நோபெல் பரிசுபெற்ற ஆங்கில மகாகவி

# டி. எஸ். எலியட்

## (1888 — 1965)

[வித்தியாரத்தினம், நவாலியூர் சோ. நடராசன்]

ஆங்கிலப் பெருங்கவியாய் விளங்கிய டி. எஸ். எலியட் சில தினங்களுக்குமுன் அமரரானார். 1888-ல் பிறந்த எலியட் 1948 செப்டெம்பர் 26 இல தமது சஷ்டியாப்த பூர்த்தியைக் கொண்டாடியபொழுது அவர் பிறந்த அமெரிக்க நாட்டவரும் தாய்நாடாக அவர்வரித்துக்கொண்ட ஆங்கிலநாட்டவரும், ஐரோப்பிய தேசத்தவரும், ஆங்கில மொழி அறிந்த ஏனைய நாட்டவரும் தமது வாழ்த்தையும் வணக்கத்தையும் தெரிவித்து ஆங்கிலப் பெருங்கவியெனப் பாராட்டும் வழங்கினார்கள். ஆரம்பத்திலே அவருடைய கவிதைகளை உலகம் நன்கு தெளிந்துகொள்ள முடியாதிருந்தது. பின்னர் சிறிது சிறிதாக அவர் எழுதிய விமரிசனங்களின் துணைகொண்டே அவருடைய உயர்வையும் சிறப்பையும் அறியத் துவங்கிற்று. ஐரோப்பிய இலக்கியங்களையும், கீழைத்தேச இலக்கியச் செல்வங்களையும் உபநிடதம் பகவதகீதை போன்ற தத்துவநூல்களையும் பயின்று, அவ்வனுபவங்களின் பயனாக மாணிக்கவாசகர், தாயுமானார், இரவீந்திரநாத் தாகூர்போன்ற பெருங்கவிகளின் ஆன்மநேய ஒருமைப்பாட்டைப் பெரிதும் விளக்கக்கூடிய அழகிய கவிதைகளையும் நாடகங்களையும் எழுதினார். விமர்சனத்துறையிலே பொருளைத் தலைக்கீடாக வைத்துக்கொண்டு புலவன் அனுபவங்களை ஒன்றுபடுத்திப் புலப்படுத்த வேண்டும். அனுபவங்களால் உணர்ச்சி வேகம் தனித்தனி நில்லாது பற்பல உணர்ச்சிவேகங்களையும ஒன்றுபடுத்த வேண்டும்; சிந்தனையை உணர்ச்சியாக்கி உணர வேண்டுமென்றெல்லாம் கூறிப் புதியதொரு கலாவிமரிசனத்தை உண்டாக்கினார். விமர்சகனே கவிஞனுகவுமிருந்தால் கவ்தைத்தொழிலின் நேரடியனுபவத்தைப் பெற்று விமரிசனத்தை அனுபவபூர்வமான பேச்சாக்குவானென்று மகூறினார். கவிதைகவிதைநாடகம், விமரிசனம் என்றமூன்று இலக்கியத் துறையிலும் எலியட் புதியதொரு திருப்பத்தை உண்டாக்கி, உலக இலக்கியங்களெல்லாவற்றிலும் புதியதொரு போக்கைப் பதிய வைததார் அதனல் டி. எஸ் எலியட் கவிகளில் தலைசிறந்தவராயும் விமரிசனத்துறையில் புதியதொரு நோக்கை உண்டாக்கியவராயும் விளங்கினார்.

எலியட் அமெரிக்காவில் உள்ள செண்ட்லூயியில், மிசூரி என்ற இடததிலே 75 வருடங்களுக்கு முன் பிறந்தார், இவருடைய முன்னோர்கள் இங்கிலாந்திலேயுள்ள கிழக்கு கோக்கர் என்ற ஊரிலிருந்து 300 வருடங்களுக்கு முன் அமெரிக்கா சென்று அங்கே குடியேறிவாழ்ந்தனர். இவர் பரம்பரையில் புலவர்களும், குருமாரும், இலக்கிய கர்த்தாக்களும் விளங்கினர். இளமையில் இவர் ஹார்வாட் சர்வகலாசாலையில் தத்துவ சாத்திரம் பயின்றார். பின்னர் 1910-ல் சோபோன் சர்வகலாசாலையில் இலக்கியமும் தததுவ சாத்திரமும் பயின்றபின்னர் மறுபடியும் ஹாவாட்டுக்கு வந்து மேலும் கல்வி பயின்றார் பின்னர் ஜெர்மனியிலும் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையிலும் பயின்றபின் 1914—18 ஆண்டுவரை பாடசாலை ஆசிரியராகவும் வங்கி நிர்வாகியாகவும் தொழில் புரிந்தார். இற்றில் பத்திராசிரியராகவும, பிரசுர கர்த்தாவாகவும் விளங்கினார்.

இக்காலத்திலேதான் இவருடைய கவிதைகள் சஞ்சிகைகளில் வெளியாயின. 1917—1920-ம் ஆண்டுகளுக்கிடையில் இவர் கவிதைகள் சிறு நூல்களாக வெளியாயின. ஆனல் 1922-ல் "The Waste Land" "பாலை நிலம்" என்ற கவிதைத் தொகுதி வெளியாயிற்று. அது இவருடைய புகழை நிலைநாட்டிற்று. அன்று தொட்டு ஆங்கில இலக்கிய உலகில் இவர் பெருங் கவிஞராகக் கொணடாடப்பட்டார். 1927-ல் எலியட் பிரிட்டிஷ் பிரசையாக மாறியதுடன் தாம் இலக்கியத்துறையில் செம்மையாழ் இலக்கிய மரபைப் பின்பற்றுபவர் (classicist) எனக் கூறிக்கொண்டார் "classicist" என்றால் பழைய கிரேக்க, உரோம, இலக்கிய மரபுகளையும் அதைப் பின்பற்றியெழுந்த ஏனைய இலக்கிய மரபுகளையும் அனுசரிப்பவர் என்பது கருத்து. ஐரோப்பிய இலக்கியங்களில் பெரிதும் பரிச்சயம பெற்றார். இலக்கிய கர்த்தாக்கள் பல இலக்கியங்களிலும் நிரம்பிய அறிவுபெறவேண்டுமென்பது எலியட்டின் கொள்கை; தண்டியாசிரியரும் இவ்வாறே கூறுவர். கிரேக்க, ரோமப் பேரிலக்கியங்களை விட இத்தாலியப் பெருங்கவியான தாந்தே, பிரெஞ்சுக் கவிஞர்களான பூடிலேர், மல்லார்மே முதலியவர்களின் கவிதைகளில் ஆழ்ந்த அறிவுடையவராய் அவர்களுடைய போக்கைப் பெரிதும் அனுசரித்துக் கவிபுனைந்தார். இவற்றைவிட உபநிடதம், பகவத்கீதை, பௌத்தசமய நூல்கள் என்பவற்றில் பெரிதுப பயின்றார் எனவே இவருடைய பாடல்களில் ஆங்காங்கு உபநிடத வாக்கியங்களும் கீதையின் கருத்துக்களும், சைவசித்தாந்தச் செம்பொருட் குறிப்புக்களும் அடிக்கடி வருவதை நாட்டமுள்ளவர் கண்டுகளிப்பர்.

பின்னர் இறைட் டீரியன் (criterion) "உரைகல்" என்ற ஒரு மும்மாத சஞ்சிகையின் ஆசிரியராயிருந்து இலக்கிய உலகில் பெரிய செல்வாக்கைப் பெற்றார். 1938-ல் இச் சஞ்சிகை கைவிடப்பட்டது. இவருடைய புகழ் நாளடைவில் பழைய இலக்கிய மரபைப் பின்பற்றியவர்களிடத்தும் பரவிற்று, பிரிட்டிஷ் மன்னர் இவருக்கு இங்கிலாந்திலே வழங்கக்கூடிய பெரிய விருதான order of merit என்ற பட்டத்தை வழங்கக் கௌரவித்தார். பின்னர் 1948-ல் நோபல் பரிசு கிடைத்தது இவர் தமது காலத்தின் கோலததை உலக மக்களுககு எடுத்துக்காட்டி விளக்கி, "சாதியின் மொழியைத் தூய்மை செய்தார்" எனப் போற்றப்படுகிறார்.

லண்டன் நகரிலுள்ள உயர் சமூகத்தவரிடையே காணும் அவலக்கவலைகளையும், போமலாட்டங்களையும், வெளிப்பகட்டையும், உள்ளீடற்ற தன்மையையும் எலியட்டின ஆரப்ப கவிதைகள் எடுததுக்காட்டுகின்றன. ஊழல நிறைந்த வங்கி முதலாளிகளும், சீரழிந்த பிரபு வம்சத்தினரும, தமது சமூகப்பேரத்தில் ஈடுபட்டுக்கொளளும் நிலையையும், கடைசிக்கடதாயத்தில அவர்களெல்லாரும், "கோப்பிக் கரண்டியால் என வாழ்வை அளந்துகட்டி விட்டேன்" அதாவது கோப்பி குடித்ததுதான மிச்சம் என்று கணக்குக்கொடுக்கும போக்கையும் காட்டுகின்றன. எலியட் முரணான நிலைகளைச் சாதுரியம நிறைந்த வாக்கினல் நிரைப்படுததக் காட்டுவார்; அழகியதும், அலங்கோலமானதும், ஆர்வமுள்ளதும, சாவசாதாரணமானதுமானவற்றை ஒன்றோடொன்று பொருததிவிடும்போது ஒன்றையொன்று விளக்கக்கூடிய நிலை ஏற்படச் செய்வார். அவை தம்முள் ஒன்றையொன்று எடுததுக் காட்டிக்கொண்டு விளங்கும,

தொடர்ச்சி 3ம் பக்கம்

---

## சிவராத்திரி விழாவில் பரிசு பெற்றவர்கள்

1-3-65 திங்கட்கிழமை வயாவிளான் இந்துசமய விருத்திச் சங்கததின் ஆதரவில் ஆசிரியர் திரு. சி, இராமலிங்கம அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிவராததிரி விழாவில், பேச்சுபபோட்டியில் வெற்றிபெற்றவர்களுககுப் பரிசுகள் வழங்கப்பட்டன, பரிசுபெறறோர் விபரம் பின்வருமாறு:

கீழ்ப்பிரிவு:

செல்வன் சி. முருகானந்தம் முதலாம் பரிசு.
,, சு, இலிங்கநாதன் இரண்டாம் பரிசு,
,, ந மகாராசா மூன்றும் பரிசு.

மத்திய பிரிவு:

செல்வி அ. திருமகள், முதலாம் பரிசு
செல்வன் க. கதிர்காமநாதன் இரண்டாம் பரிசு.
செல்வி இ. மலர்மகள் மூன்றும் பரிசு.

மேற்பிரிவு: (1)

செல்வன் ந கதிர்காமநாதன் முதலாம் பரிசு,
,, சி, கிருஷ்ணமூர்த்தி, இரண்டாம பரிசு.
,, க. சிவபாதம், மூன்றும் பரிசு,

மேற்பிரிவு: (2)

செல்வி ச. சத்தியபாலதேவி, முதலாம் பரிசு.
செல்வன் சு. சிவதாசன், இரண்டாம் பரிசு.
,, க. ஆனந்தராசா, மூன்றும் பரிசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவப்புலவர் — சித்தாந்த பண்டிதர் பரீட்சைகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் வருடந்தோறும் நடாத்தப்பெறும் இளம் சைவப்புலவர் – சைவப்புலவர் – சித்தாந்த பிரவேச பண்டிதர் – பாலபண்டிதர் – பண்டிதர் தேர்வுகளுக்கான பாடத்திட்டத்தையும், விண்ணப்பப்பத்திரங்களையும் "காரியதரிசி, சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரியில் நேரிற்சென்றும், கடிதமூலமும் பெற்றுக்கொள்ளலாம்,

---

நல்லைக்கீர்த்தனம்

## வேறுதுணை இல்லை முருகா!

யாழ்ப்பாணம் – ந. வீரமணி

ராகம்: ஆனந்தபைரவி பல்லவி: தாளம்: ஆதி.

வேறுதுணை இல்லை வேல்முருகா – குகா
ஆறுமுகனே இந்த அவனியில் உனையன்றி (வே)

அநுபல்லவி:

ஏறுமயிலேறி எழிலான வேலேந்தி
கூறுமடியரிடர் குறைகளைத் தீர்ப்பவனே! (வே)

சரணம்:

நல்லை நகர்வாழும் நாதனே! நின்பதமே
நம்பினேன் வேலனே நானுமனு தினமே
தில்லை நடேசனவன் திருக்குமரா! முருகா
எல்லையில்லா அருளை என்றும் பொழிபவனே! (வே)

---

## டி. எஸ். எலியட்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பாடலில் கடலைப்பற்றிய உருவகம் அடிக்கடி ஏற்படும். இது அவருடைய கருத்தையும் உணர்ச்சியையும் எடுத்துக்காட்டும் உருவகமாகும். ஆங்கிலத்திலே இதனைச் சிம்போலிசும் என்பார்கள். கடல் பல கருத்திலே அங்கு தோன்றுகிறது. முக்கியமானது கீதையிலே இரண்டாம் அத்தியாயத்தில் வரும் "அபூர்த்யானம் அசலப்பிரதிஷ்டம் சமுத்ரம்" என்ற கருத்தை, எதிரொலிப்பது போலக் காணப்படுகிறது. இது கீதையில் "நிறைந்த அசைவற்ற கடல்" என ஓர் உவமையாகப்பயன்படுகிறது. எலியட்டுடைய கடல், வாழ்வின் ஆதியுயிர்ப்பையும சக்தியையும் குறிக்கும். சிவஞானபோதத்திலே இரண்டாஞ் சூத்திரத்தில் கூறப்படும 'ஆணை' என்ற மாயாகரணத்தை இது [illegible] குறிக்கலாமென்பது ஒரு குறிப்பு. இங்கே இதை விளக்கவேண்டா. எலியட் நமது பக்தர் பரம்பரையைச் சேர்ந்த பெரும் புலவர்: இந்த சமயத்தில் அவர் பிறக்காவிட்டாலும் உலகத்துச் சமயங்களெல்லாவற்றிலும் அடிப்படையாயுள்ள மெய்ப்பொருள் நாட்டத்தைச் சீவசுருதியாகக் கொண்டு கவிதை பாடிய அருட் செல்வர். "எல்லா உயிர்களும் உறங்கும் போது ஞானி விழித்துக் கொள்ளுகிறான்" "யாநிஸா சர்வபூதானும் தஸியாம ஜாக்ரதி சம்யம" என்ற கீதாவாக்கியத்துக்கு இலக்கணமானவர், The waste land, Four Quantet, Chonises from the Rock என்ற பாடல்களில் எல்லாம், மெய்ப்பொருள் நாட்டமின்றி, அறிய வேண்டிய செம்பொருளை அறியாமல், அறியவேண்டாத பசுஞானபாச ஞானங்களிலே பெரும் பொழுதைக் கழிக்கும் மன்பதையின நிலைமையைத் துயரோடும், மனக்கசப்போடும் பாடுகிறார். இந்தப் போக்கு நமது சித்தர் பாடல்களையும், திருமூலருடைய திருமந்திரப் பாடல்களையும், யோகர் சுவாமிகள் அருளிய நற்சிந்தனைப் பாடல்களையும் நினைவூட்டுகின்றன. இவ்வளவும் கூறியவுடன் எலியட் எத்தகைய புலவர் என்று இனங்கண்டு கொள்ளக்கூடியதாகிறது:

—தொடரும்

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 3830

காலம்சென்ற சின்னத்தம்பி சரவணமுத்து யாழ்ப்பாணம் சண்முகம்கதிரவேலு துரைசிங்கம் சுண்டிக்குளி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் T 1052 வழக்கில் தத்துவகாரனாக நியமிக்கப்பட்டது.

1. சின்னப்பொடியர் சின்னப்பு பலாலிரோட் யாழ்ப்பாணம்.

2. சின்னத்துரை கைம்பெண் நாகேஸ்வரி வண்ணார் பண்ணை மேற்கு. -எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3830-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1965 ம் ஞு (3-4-65) சித்திரை மீ 3 – சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 10716-66ம் 17-1-61 திகதி தொடக்கம் 23-5-61 வரைக்கும் ரூபா 10000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு தொகையால் ரூபா 200 கொடுபட்டது மிகுதி கழித்துவிடப்பட்டது. இன்னும் ரூபா 4000 கொடுபட்டது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணைக்கோயிற்பற்று, வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை 'இலகடி" பரப்பு நிலலாச்சம் 2½-ம். இதில் தென்புறமாக பரப்பு நிலலாச்சம் 2 குழி 4 5/10 கட்டிடங்களும், மண் வீடும, கக்கூசும், கிணற்றில் பங்கும், வழி வாய்க்காலும், குறித்த பரப்பு நிலலாச்சம் 2 குழி 4 5/10-க்கு எல்லை கிழக்கு பலாலி ரோட்டு, வடக்கு கதிர்காமர் தம்பிமுத்து பெண் நாகம்மாவுக்குரிய காணி, மேற்கு வாய்க்கால், தெற்கு சின்னப்பொடியர் சின்னப்புவுக்கும் முருகர் பொன்னையாவுக்கும் உரிய காணிகள். ஆது அடங்கலும்,

2, மேற்படி வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை. "இலகடி' பரப்பு நிலலாச்சம் 5 குழி $3\frac{1}{4}$, இது நிலாச்சம் $2\frac{1}{2}$, நில, $2\frac{1}{2}$, குழி 3 1/4 கொண்ட 3 துண்டுகளாக இராது தற்போது 1956-ம் ஆண்டு பங்குனிமாசம் 2-ந் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா திரு. S. ஏகாம்பரம் அவர்களால் 160-ம் இலக்கத்தில் விஸ்தரிக்கப்பட்ட படத்தின்படி தற்போது நிலலாச்சம் 5 குழி 6 4/12. இதில் வடக்குப்பக்கமாகக் குறித்த படத்தின் 2-ம் கண்டமாக கட்டப்பட்டிருக்கும் 10 9/10 குழியும் கடைக் கட்டிடமும் கிணறும் மற்றும் அதற்குரியவைகளும். இது குழி 3 1/4-ம் மிகுதி குறித்த $2\frac{1}{2}$யிலும் எடுக்கப்பட்டதும் ஆக உள்ளது. இந்தக்குழி பத்தொடு பத்தில் 9-க்கு எல்லை கிழக்கு பலாலி ரோட்டு, வடக்கு பொன்னையா பெண் அன்னம்மாவுக்கும் மறு பேருக்கும் உரிய ஆதனம், வடக்கு கதிர்காமர் தம்பிமுத்துவுக்குரிய $2\frac{1}{2}$ நிலப்பரப்பைக் கொண்ட குறித்த இந்தப்படத்தில் முதலாம் கண்டமாகச் சுட்டப்பட்டிருக்கும் ஆதனம் மறு துண்டுகளுக்குரிய கிணற்றுப்பங்கும் வழி வாய்க்கால் உருத்தும் புறநீங்கலாக மிகுதி அடங்கலும்.

சி. செ. மாரிமுத்து,
கொமிசனரும்,விலைமதிப்பாளரும் உத்தரவு பெற்ற ஏலதாரரும்.
விதானை வளவு, சித்தன்கேணி
10-2-65.
M. 287 12-3-65

---

### கோட்டு விற்னவு விளம்பரம்

கரையூர், யாழ்ப்பாணம்
1. செபஸ்தி சைமன் —வழக்காளி

எதிராக

கரையூர், யாழ்ப்பாணம்
1. சூசை பற்ணுந்தும் பெண்
2. ஆனுசியும்
3. சூசை பறணுந்து மகள் ரோசமலரும்
4. P. கந்தன் — எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B, 5511-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக காணி 1965-ம்ஞு சித்திரைமீ 21உ புதன்கிழமை முற்பகல் 9½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 3952-ம் 23-3-1963 திகதி தொடக்கம் 1 – 2 – 1964 திகதி வரைக்கும் ரூபாய் 3000 - க்கு 12 வீத வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 287-77½ சதம். தற்போது முததிரைச் செலவு ரூபா 12. இதில் முதல் கணக்கால் ரூபா 2114/– கொடுபட்டது. கோட்டுச் செலவால் ரூபா 286 கொடுபட்டது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிகுளிக் கோவிற்பற்று கரையூர் இறை "பேயன் தலைமடைப்புலம்" நிலப் பரப்பு இரண்டு குளி பன்னிரண்டரையும் (நில. பர. 2 குளி 12½)வீடும் குசினி கிணறு மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு பிலிப்பையாவின ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு லயனல் திசவீரசிங்கிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு P, W, D கநதோராதனம. இதடங்கலும் விற்கப்படும். பதிவு D 229/250.

ந. ஆறுமுகம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
சித்தங்கேணி
8-3-1965.
M 290 12-3-65.

---

## யாழ்ப்பாணப் பாலம் அழிந்தது

[ தென்மயிலை திரு. செ. கோவிந்தசாமி ]

சைவப்பெரியார் திரு செ. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் இற்றைக்கு 75 வருடங்கட்குமுன் தமிழகத்தில் பிறந்து திருமயிலையில் வாழ்ந்தார். வாழ்ந்து வரும் காலத்தில் யாழ்ப்பாணத்துப் பெருமக்களோடு தொடர்புடையவராய் இருந்தார். விசேடமாக, கொக்குவில் சபாரத்தின முதலியார், புலோலி திரு- சு. சிவபாத சுந்தரம் பிள்ளை, மட்டுவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பண்டிதர் ம வே. திருஞானசம்பந்தர், இலக்கணம் முத்துக்குமாரத்தம்பிரான் முதலானோர் இவரோடு தொடர்புடையவர்கள். இவர் சில சைவநூல்கள், கட்டுரைகளை ஆக்கம் செய்திருக்கிறார்.

சைவப்பெரியார் திரு. சு சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களைக் கொண்டு, சைவசமயசாரம் என்னும் நூலை எழுதுவித்து வெளியிட்டார். "சபாரத்தின முதலியாருக்குப்பின் யாழ்ப்பாணத்தில் ஒரு சைவப்பெரியார் இருக்கிறார் என்று சொன்னால் அது திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் என்றே சொல்லலாம்", என பிள்ளை அவர்கள் கூறியதுண்டு. இற்றைக்கு 25 வருடங்கட்குமுன் யாழ்ப்பாணம் வந்து சைவஇளைஞர் சபைக்குத் தலைமைவகித்துப் பேருரை நிகழ்த்தினார். இதன் பிறகு பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வரவேயில்லை. இதுவரையில் யாழ்ப்பாணமக்களோடு தொடர்புகொண்டிருந்த ஒரேயொரு பாலமும் அழிந்துவிட்டது. ஆம், எங்கள் ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் மாசி மாதம் 8ந் திகதி இறைவன் திருவடி நிழலை அடைந்துவிட்டார்கள் சைவமும்தமிழும் வாழ்க.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில்

சாவகச்சேரியைச் சேர்ந்த மட்டுவில் தெற்கு தம்பையா இராசநாயகம் —வழக்காளி

இல- 2633

எதிராக

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூர் தம்பிஐயா பாலகிருஷ்ணன், —எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 2633-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க்காணுமாதன விடாப்பில் நன்கு விபரிக்கப்படுமாதனம் 1965-ம் ஆ வைகாசிமீ 26-ந்உ புதன்கிழமை பிற்பகல் 2-30மணியளவில் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- ரூபா 1613 - 53 சதமும். 20-3-1963 தொடக்கம் 24-10-63 வரையும் ரூபா 1000-க்கு நூற்றுக்கு 10% வீத வட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5% வீத வட்டியும் செலவு ரூபா 187-25 சதமும்,

ஆதனவிடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று மீசாலையிறை வெள்ளுருவையடி நில பர, 8, எட்டுக்கெல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கும் மேற்கும் சின்னத்தம்பி கார்த்திகேசுவுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம், தெற்கு கார்த்திகேசு வேலாயுதத்துக்கும் பங்காளருக்குமுரியவாதனம். இதடங்கலுமிதைச்சேர்ந்தவைகளனைத்தும்.

மு. நா. மார்க்கண்டு,
கொம்மிஷனர்.
சாவகச்சேரி, 16-3-65.
M. 289 12-3-65

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

17, செட்டித்தெரு,
நல்லூர் யாழ்ப்பாணம்
செல்லையா பாலசிங்கமும் பெண் காந்திமதியும் — வழக்காளிகள்
இல. M,B, 52 8

எதிராக

கோப்பாய் வடக்கு, கோப்பாய்
நாகநாதர் இரத்தினமும் பெண் அன்னம்மாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5298-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1965-ம்ஞு சிததிரைமீ 17உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 2780-ம், 2- 1 - 1963 தொடக்கம் 10-10-63 வரைக்கும் ரூபாய் 2000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 243 – 65 சதம். இதில் ரூபாய் 1000 கொடுபட்டுள்ளது.

ஆதன வபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் வடக்கு இறை 'ஆனைவிழுந்தான்" நில. பர. ஏழு (7) எல்லை கிழக்கும், தெற்கும் ஒழுங்கை, மேற்கு அரியகுட்டி ஜெயரத்தினத்திற்கும் பெண் அன்னலட்சுமிக்குமுரிய ஆதனம், வடக்கு சீனிவாசகம் கந்தையாவிற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இவ்வாதனம் K 206/290.ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது,

நீ. அன்ரனிப்பிள்ளை,
கொம்மிஷனர்&விலைமதிப்பாளர்
261, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
M 291 12-3-65,

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம் கொட்டடி,
நாகலிங்கம் கைம்பெண் விசாலாட்சி —வழக்காளி
இல. M,B. 3634

எதிராக

தெல்லிப்பழை,
தெல்லிப்பழை கிழக்கு
1. நாகநாதி சிதம்பரப்பிள்ளையும் பெண்
2. பொன்னம்மாவும் —எதிரி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B, 3634-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்காணும் ஒரு துண்டுக்காணி 1965-ம்ஆ ஏப்றில்மீ 10உ 10-4-1965) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2500-ம், இன்னும் 3000-க்கு 22-9-60 தொடக்கம் 15-2-61 வரைக்கும் 10 வீத வட்டியும் கூடிய தொகைக்கு 15 - 2 - 61 தொடக்கம் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 249-95. ஆனால் கோட்டுச் செலவால் கொடுபட்ட ரூபா 125-ம் வட்டியால் கொடுபட்ட ரூபா 1000-ம் கழிபடவேண்டும்.

காணியின் விபாம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை கிழக்கிறை "கிளானை" நில பர, (10) பத்து. இதில் அறுதி மேற்குப்பக்கமாக அறுதிவிற்ற நில. பர. (3) மூன்று நீக்கி மிகுதி நில. பர, (7) ஏழும் அதற்குரியவைகளும், இந்த நில. பர. ஏழுக்கும் எல்லை கிழக்கு, வடக்கு, தெற்கு ஒழுங்கை, மேற்கு இதன் மிகுதியாதனம்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில் மேற்கு
8-3-65.
M. 288 12-3-65.

---

மலைமகளே! சூரியன் ஆயிரக்கணக்கான கிரணங்களைக் கொண்டு திக்குகள் எங்கும் பிரகாசமடையும்படி செய்கிறார். ஆனால் என் மனதுள்ளே இருக்கும் இருட்டைப் போக்க சூரியனால் முடியாது. உமது கோமள[illegible] களுக்கு புறம்பும் உள்ளும் இருளை அகற்றி ஆட்கொள்ளுகிறீர்.

-நாராயணபட்டோத்திரி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M.B- 5854

சண்முகம் பொன்னையா
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்,
- வழக்காளி

எதிராக

தம்பு பொன்னுச்சாமி கைம்பெண் பாக்கியம்,
நாயன்மாகாடு வீதி,
யாழ்ப்பாணம்.
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B, 5854-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைசத கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1965-ம் ஸு 27-3-65 சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 5075-ம், 15-7-63தொடக்கம் 24-1-64 வரைக்கும் ரூபாய் 3500-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 363,

ஆதன விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை. "மிகைப்புல வளவு" ஏழி 16 1/2-யும் வீடும் தென்மேற்கேஇருக்கின்ற கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பு உருத்தும் இக்காணியில் இருந்து ரோட்டுக்குப் போகும் பாவிப்பு உருத்தும் செய்பயிர்களும். எல்லை கிழக்கு சொரணப்பெண் தனலட்சுமிக்குரிய ஆதனம், வடக்கு K. தட்சணமூர்த்திக்குரிய ஆதனம், மேற்கு சுப்பையா பெண் தில்லைமுத்துவுக்குரிய ஆதனம், தெற்கு ரோட்டும் சொர்ணம் பெண் தனலட்சுமிக்குரிய ஆதனம், இது அடங்கலும்

2. மேற்படி இறை "பிச்சைக்குட்டி வளவும் மறு பிரிவுகளும்" பரப்பு கிலலாச்சம் 2-ம். கல்வீடும் பயிர்களும் கிழக்கெல்லைக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் மற்றும் அதைச்சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு S, சின்னத்தம்பி சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு எதிராளியின் ஆதனம், தெற்கு S. பொன்னுத்துரைக்குரிய ஆதனம், இது அடங்கலில் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும், ஆனுல் குறித்த கிணற்றில் மேற்கெல்லைக்காணிக்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பு உருத்துப்புறநீங்கல்.

3, மேற்படி இறை "பிச்சைக்குட்டி வளவு" மறு பிரிவுகளும், பரப்பு கிலலாச்சம் 1/2-யும் பயிர்களும், கிழக்கு எல்லையாகிய இரண்டாம் காணியில் இருக்கின்ற கிணற்றில் பங்கும் அக்காணியில் வடக்கருகால் வழிவாய்க்கால் பாவிப்பு உரித்துப் எல்லை கிழக்கு மேற்காட்டிய இரண்டாம் ஆதனம், வடக்கு ரோட்கு, மேற்கு K- சாம்பசிவத்துக்குரிய ஆதனம், தெற்கு S பொன்னுத்துரைக்குரிய ஆதனம். இது அடங்கலில் சொரியலாய் அரைவாசியும் அதைச் சேர்ந்தவைகளும்.

அ. ஜெகநாதன்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்,
16 A. அம்மன் ரோட்
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
M. 293 12-3-65.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கொழும்பு. முத்துவால்
41 சென்யோன்ஸ்வே
1. S.M அல்பிறட்டும பெண்
2. வயலற்றும்
—வழக்காளிகள்

இல, M.B. 5282

எதிராக

யாழ்ப்பாணம், பாங்சால்வீதி
W. E. யோசேப்பு தனக்காகவும் தனது காலஞ்சென்ற மனைவி இராசமணிக்காகவும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B, 5282-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை, 1965-ம் ஸு சித்திரைமீ 23உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.


# எ.ஃப். ஜீவாஜி சகோதரர்கள்

## மொத்த, சில்லறை வியாபாரிகள்

அச்சுக்கந்தோர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தேவையான காகிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப்பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கொப்பி, பென்சில், பாடசாலைப் புத்தகங்கள், பேனை, பலவிதமட்டைகள், சோடனைக்கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எஃப் ஜீவாஜி சகோதரர்கள்,
ஜுபிலி பஜார், இலக்கம் 9, (ராணி சினிமாவுக்கருகில்)
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்:
ஜீவாஜி சகோதரர்கள்,
50. புதிய சோனகதெரு கொழும்பு-12

கிளை:
இன்டிப்பென்டன் ரேடிங்கொம்பனி,
51A, 1-ம் குறுக்குத்தெரு
கொழும்பு - 11

தொழிற்சாலை: 146, புதிய சோனகத்தெரு, கொழும்பு 122
தொலைபேசி: 7126.


# வரியோ வரி.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடைவரி, மூலதன இலாப வரி போன்ற வரிகளைக் கொண்டு வந்துள்ளது ஆரம்பத்தில் செல்வவரி ½ விகிதமாக இருந்தது 1963-ம் ஆண்டில் ஒரு லட்சத்திற்கு உட்பட்ட தொகைக்கு வரி விதிக்கக்கூடாதென்ற சட்டம் தள்ளப்பட்டு முழுச்சொத்திற்கும் மேற்படி வீத வரி விதிக்கப்படுகின்றது. நன்கொடை வரி 5, 8, 10 என்ற வீதப்படி முறையாகக் கணிக்கப்பெற்று அதன் உச்சம 100 வீதமாக ஆக்கப்பட்டுள்ளது பெற்ருர் பிள்ளைகளுக்கு நன்கொடை கொடுப்பதானுல் ரூபா 1000-க்கு மேற்பட்ட சொத்துக்கு மேற்கூறப்பட்ட வீதம் நன்கொடை வரி கொடுக்கவேண்டும். பெண்பிள்ளைகளுக்கு விவாகம் நடக்கும்போது சீதனம் கொடுப்பதானுல் 10000 ரூபா வரையிறருன் நன்கொடை வரியின்றிக் கொடுக்கலாம்.

இவ்வரியின் கொடுமைகளை உணர்த்த, உதாரணமாக இங்கே வரியிடும் விஷயத்தை விளக்குகின்ரும். 6 பேர் கொண்ட ஒரு குடும்பம் கணவன் மனைவி நான்கு பிள்ளைகள். கணவனுக்கு வருட வருமானம், சம்பளம் வாடகைகள், வயல்-தோட்ட வருமானங்கள் உட்பட 15000 ரூபா கணவன் செலவுக்கு 3000 மனைவிக்கு 500, பிள்ளைகள், ஒவ்வொன்றுக்குப் உணவு, உடை, கல்வி முதலியவற்றிற்கு ரூபா 250/- சப்பாத்தியகழிவு ரூபா 500/- இவ்விதமாக முழுக் குடும்பத்தின் செலவுக்கும் 5000 ரூபா கழித்துவிட்டு வரிகட்ட வேண்டும்.

நிலங்களின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு வருகின்றது. 1957-ம் ஆண்டில் ஒரு லட்சம் பெறுமதியான ஆதனம், இப்பொழுது மூன்று லட்சம் மதிக்கப்படுகின்றது, காணியின் பரப்பு கூடவில்லை.

1957-ம் ஆண்டில் இருந்த விலையைக் கழித்து மிகுத இரண்டு லட்சம் ரூபாவுக்குப் மூலதன லாப வரி என்று புதிய வரியொன்று அறவிடப்படுகின்றது. இவ்வரி மற்றைய வரிகளுடன் சேர்த்து அறவிடப்படுகின்றது. இக்குடும்பத்திற்கு மூலதனலாடமென 2 லட்சத்துப் 15 ஆயிரம் ரூபா யதிக்கப்பட்டுள்ளது இத்தொகையில் 5000 ரூபா கழித்து 210000 ரூபாவுக்கும் 15, 20, 25, 30, 35, 40 வீதமாக முறையே 23000 ரூபாவுக்கும் 13500 ரூபாவுக்கும் செலுத்தி மிகுத 197500 ரூபாவுக்கும் 45 வீதமாக 84375 ரூபா மதிக்கப்பட்டுள்ளது. மேற்படி குடும்பத்தலைவன் இறந்தபடியால் முழுமூலதன லாபப் உட்பட மூழுவருமானத்திற்கும் வருமானவரியாக 97875 ரூபா செலுத்த வேண்டியுள்ளது. இதுமாத்திரமல்ல பூதல்வரியென்று ஒன்று செலுத்த வேண்டியுள்ளது

அது படிமுறைபாக 15, 20 வீதமாகச் செலுத்தப்பட வேண்டும். இறந்தவரின் முழுச்சொத்தும் 3 லட்சபெறுமதியானுல் அவரின் சொத்துக்கு அரசாங்கம் அறவிடும் பூதல்வரி 30150 ரூபாவாகும். ஆகவே முன்னரே சொல்லப்பட்ட 97875 ரூபாவுடன் 30150 ரூபாவையும் சேர்த்து இப்பொழுது ரூபா 1 லட்சத்துக்குமேல் இறந்தவரின் மனைவியும் பிள்ளைகளும் அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்தவேண்டும்.

—0—

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 1462-ம், 22-12-62 தொடக்கம் 13-11-63 வரைக்கும் ரூபாய் 1000-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 61- இம்முதல் வட்டி ரூபாயில் ரூபா 600 கொடுபட்டிருக்கிறது,

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் சுண்டிக்குளிப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூர் இறை "நீலக்குடித்தறையும் அரியதுரையன் தறையும். பர. நில, இலா- (3) மூன்றும் வீடும் செய்பயிர் வான்பயிர்களும் புதிய கிணறும். இதற்கு எல்லை கிழக்கு K. K. செல்லப்பாவின் ஆதனம், வடக்கு மாட்டின் தம்பி மூத்து யோசேப்புக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், மேற்கு சுவாம்பிள்ளை பெனடிக்குகுரிய ஆதனம், தெற்கு ரோட்டு. இதில் சொரியலாய் 17 பொயின்ற் 7 குளியும். பங்குவீதாசாரப்படியான பயிர்வகைகளும், கிணற்றில் அரைவாசிப்பங்கும். பதிவு இலக்கம் D 221/153,

அ ஜெகநாதன்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
16 A அம்மன்ரோட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
M 292 12-3-65,

இவ்வாரம் 14-3-65 — 20-3-65

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

அதிக உழைப்பு. எனினும் பயன் உண்டு. உட் பகைவர்களால் தொல்லை. சுகக்குறைவு,

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகினி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்பச்செயல்களில்குழப்பம் நிம்மதி குறையும் உறவினருடன் கலகம் பகைவர்க்குத் தோல்வி, பொருள் கிடைக்கும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

பொதுவாக நல்ல கிழமை. பொருள் வரவு. புதுத்தொழில்களில் நன்மை. ஏவலாளர்களால் உதவி. எதிர்ப்புக்களை வெல்வீர்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

பொருள்வரவு, எனினும் வரவுக்கு அதிகமான செலவு. உறவினருடன்தொல்லை. சுகக்குறைவு.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

குடும்பத் தொழில்களில் குழப்பம். உடல்நலம் குன்றும். வெற்றிக்குக் கடும்உழைப்புவேண்டும். உட்பகைவர்களிடம் கவனம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

அதிகவேலை. சுகக்குறைவு. கலகங்களுக்கு மூந்துதல். பகைவரால் தொல்லை. எனினும் அவை நீங்கும்,

**துலாம்,** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

புதுத் தொழில்களில் வெற்றி. பகைவர்குததோல்வி.புகழ்வரவு நிம்மதிக்குறைவு.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

உறவினர் நண்பர்களுடன் கருத்துவேறுபாடு. உட்பகைவர்களால தொலலை அதிக வேலை. குடும்பதொழில்களில் குழப்பம்,

**தனுராசி** மூலம், பூராடம உத்தராடம் 1ம பாதம்,

உடல்நலம் குன்றும். உறவினருடன் கலகம். ஞாயிறு தங்கள் முற்பகலகவனம். பொருளகிடைக்கும்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

நன்மைக்குரிய சில மாற்றங்கள் நிகழும். பொருள் வரவு நிம்மதி நீங்கும். திங்கள் செவ்வாய் புதன்முற்பகல் எச்சரிக்கை-

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

அவசியமற்றகண்டனங்களுக்கு ஆளாவீர். பொருள்வரவு குடும்பதொழில்களில்குழப்பம் புதன் பிற்பகல் வியாழன் வெள்ளி எச்சரிகை,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதிரேவதி. 1, 2,3ம் பாதம்.

உடல்நலம்குன்றும்.மார்புநோய் வயிற்றுக்குழப்பம்பொருள்கிடைக்கும, பகைவர்குத் துன்பம். வெள்ளி பிற்பகல் சனி கவனம்,

## சமய சமரசம்

1-ம் பககத் தொடர்ச்சி

டும். இது அசோகசாசனம். இதுவே இந்து சமயத்தின் சிறப்புகளில் ஒன்று, சைவத்திலேயுள்ள சமரசம் மிகப் பழையது. "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே மாதொரு பாகனுர்தாம் வருவர்" என்கிறது சிவஞான சித்தியார், இந்தச் சமரச சன்மார்க்கம் உலகுக்கு இன்று அவசியம். இத்தந்தரத்திற்காண்டு மென்றிருந்தோர்க்கு அத்தந்திரத்தினவ் வயினெளிதலும்" என்ருர் மணிவாசகனுர்.

## நாயன்மார்கட்டு ஸ்ரீ பிச்சாடணமூர்த்தி பிரதிட்டா தினம்

யாழ். நாயன் மார் கட்டு ஸ்ரீ இராச இராஜேஸ்வரி பேச்சியம்பாள் கோவிலின் வட-கீழ்ப் பாகத்தே அமைந்திருக்கும் திருக்குளத்தின அருகாமையில்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பிச்சாடண மூர்த்தியின் பிரதிட்டா தினம் உத்தர புண்ணிய தினமாகிய 17-3-65புதன்கிழமை வழமைபோலச் சிறப்பாக நடைபெற இருக்கின்றது.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த கால முடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 2-ம் ஒழுங்கை 2-ம் இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 12 3 1965 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org